**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,**
**முதன்மை சார்பு நீதிபதி**

வா.சா. 1 தேதி.06.06.2024

| | | | |
|---|---|---|---|
| OS.No. | 473/2020 | | |
| பெயர் | கீர்த்தி வாசன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

தாவா சொத்து அடி மனை குமரகட்டளை சுப்ரமணிசுவாமிக்கு சொந்தமானது ஆகும். தாவா சொத்து மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குள் உள்ளது. அதன் டவுன் சர்வே எண்.71 ஆகும். அதன் விஸ்தீரணம் 6109 சதுர அடியாகும். அந்த விஸ்தீரணம் 6109 என்பதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் கோவிலில் குறித்து கொடுத்த ஆவணத்தில் சொல்லியுள்ளார்கள். வா.சா.ஆ.1 தான் சொத்து உரிமை காண்பிக்க கூடிய ஆவணம் ஆகும். அதில் சொத்தின் நீளம், அகலம், சொத்தின் சர்வே எண் மற்றும் வீஸ்தீரணம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 4வது பக்கத்தில் சொத்து சுப்ரமணிசுவாமி கோவிலுக்கு சொந்தமானது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் நகராட்சி வரைபடத்தில் எனது கையெழுத்து உள்ளது. வா.சா.ஆ.3ல் உள்ள விபரங்கள் நான் சொல்லி ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தின் விஸ்தீரணம் 491 சதுர மீட்டர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கட்டபோர வீஸ்தீரணம் கீழ் தளத்தில் 55.24 சதுர மீட்டர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் காலி இடம் 435.76 ச.மீ என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 வரைபடம் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் 3ல் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள 6109 சதுர அடி விஸ்தீரணம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் 491 ச.மீ என்பது 5283 சதுர அடி ஆகும். நான் பிரதிவாதி சொத்தில் எந்த உரிமையும் கோரவில்லை. எனது சொத்திற்கு தென்புறத்தில் பிரதிவாதியின் சொத்துள்ளது. வாதி சொத்தையும், பிரதிவாதி சொத்தையும் பிரிக்கும் சுவர் தென் பக்கத்தில் உள்ளது. தாவா சொத்தின் வடபுறத்தில் பிரதிவாதியின் காலி மனையுள்ளது என்று உள்ளது சரியா என்றால் பிரதிவாதியின் சொத்து தென் புறத்தில்

தான் உள்ளது. தாவா சொத்தையும், பிரதிவாதியின் சொத்தை பிரிக்கும் சுற்று சுவர் தாவா சொத்திற்கு வடபுறத்தில் உள்ளதாக சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். எனது சொத்து வடக்கால் உள்ள மனை, பிரதிவாதியின் சொத்து தெற்கால் உள்ள மனை ஆகும். எனது சொத்து பிரதிவாதியின் சொத்திற்கு வடக்கில் உள்ளது. ஆனால் பிராதில் சொத்து விபரத்தில் பிரதிவாதி காலி இடத்திற்கு தெற்கில் என்று சொல்லியுள்ளது சரியா என்றால் அது தவறு தான். பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தின் நகர அளவு எண்.70 ஆகும். நகர அளவு எண். 70 மற்றும் 71க்கு இடையே உள்ள சுவரின் அளவு தான் பிரச்சனை. வா.சா.ஆ 3 நகராட்சி அளவு பெற்ற பின்னர் தான் காம்போண்டு சுவர் அமைத்தேன். அந்த சுவர் நகர அளவு எண்.70 ல் உள்ளதா அல்லது 71ல் உள்ளதா என்றால் 71ல் தான் உள்ளது. பிரதிவாதியின் சொத்தான நகர அளவு எண்.70ல் காம்போண்டு சுவர் இருந்தார் அதை எடுப்பதற்கு நான் தயாராக உள்ளேனா என்றால் இல்லை. ஆணையர் நில அளவையருடன் வந்து சொத்தினை அளந்து காம்போண்டு சுவர் எங்குள்ளது என்று அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் நகர அளவு எண்.70ல் 104 சதுர அடி மனையில் மதில் சுவர் எழுப்பியுள்ளதாக அவர் கூறியுள்ளார் என்றால் சரிதான், அதற்கு ஆட்சேபனை போட்டுள்ளேன். எங்களுக்குள் பிரச்சனை காம்போண்டு சுவர் வைத்த பிறகு தான் ஏற்பட்டது. நான் பிரதிவாதி மனையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் இல்லை. சுவர் நகர அளவு எண்.70ல் இருந்தால் நான் அதை எடுக்க தயாரா என்றால் அது நகர அளவு எண்.71ல் உள்ளது. வழக்கு பரிகாரத்தில் தாவா சொத்தில் வாதியின் வடபுற சுற்று சுவர் என்று சொல்லியுள்ளது சரியா என்றால் என் சொத்திற்கு வடபுறத்தில் உள்ளது என்பதை சொல்லியுள்ளேன் நான் சொல்லியுள்ளது தவறு என்றும், சுற்று சுவரை பிரதிவாதியின் நகர அளவு எண்.70ல் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சுவற்றை சட்டப்படி எடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சிங்காரவேலு எனது தாத்தா ஆவார். அவருக்கு ஒரே மகன் எனது அப்பா ஆவார். பெண் பிள்ளைகள் யாரும் இல்லை. அவருக்கு வேறு வாரிசுகள் உள்ளார்கள் என்றும், எனது அப்பா தான் ஒரே வாரிசு என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு நானும், கல்யாணி என்ற மகளும் வாரிசு ஆவோம். எனது தகப்பனாரின் வாரிசு சான்று என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் ஆமாம். எனது தகப்பனாருக்கு எனது சகோதரி ஒரு வாரிசு என்ற விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை. நான் அத்துமீரி பிரதிவாதி இடத்தில் காம்போண்டு சுவர் வைத்துள்ளதை எடுக்க சொன்னதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது  சொத்து விபரமும், பரிகார விபரமும் தவறானது என்றால் சரியல்ல. நான் தான் அவரது சொத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்றும், கட்டுமானம் செய்துள்ளோம் என்றும்,  அதனை அகற்றி அவருக்கு தீர்வு கிடைக்க கூடியது என்றால் சரியல்ல.  எனக்கு எந்த தீர்ப்பும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல.